# <u>காஞ்சிபுரம் மாவட்டத் தொழில் மையத்தின் புதிய தொழில் முனைவோர் வழிகாட்டுதல் அலுவலகம் தாம்பரத்தில் துவக்கம்</u>

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் பல்வேறு வகையான மானியங்கள், ஒற்றைச் சாளர முறையில் தொழில் நிறுவன வரைபட ஒப்புதல் மற்றும் கட்டிட அனுமதிகள், புதிய தொழில் நிறுவனங்களை துவங்கும் வகையில் வங்கிகள் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெற்றுத் தரும் திட்டங்களான UYEGP, PMEGP, NEEDS திட்டங்கள் ஆகியவை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்டத்தின் தொலைதூரத்தில் அமைந்துள்ள பகுதிகளான ஆலந்தூர் முதல் தாம்பரம் வரை, மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, பழைய மகாபலிபுரம் சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலை ஆகிய பகுதிகளில் உள்ள தொழில் முனைவோர்கள் காஞ்சிபுரம் நகரில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் மையத்திற்கு வந்து செல்ல ஏற்படும் அதிக நேரம் மற்றும் சிரமங்களை தவிர்க்கும் வகையிலும் அத்தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டும் வகையிலும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணைப்படி, தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலையில் MEPZ எதிரில் அமைந்துள்ள தாம்பரம் தாலுக்கா அலுவலகத்தின் இரண்டாவது மாடியில் காஞ்சிபுரம் மாவட்டத் தொழில் மையத்தின் “தொழில் முனைவோர் வழிகாட்டுதல் அலுவலகம்” 09.09.2017 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. வாரத்தில் இரு நாட்கள், செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை இந்த அலுவலகம் இயங்கும். தொழில் முனைவோர் இந்த வழிகாட்டுதல் அலுவலகத்தை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம்,
காஞ்சிபுரம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.